[1986 மே 8

50—

பண்ணைப்பட்டி ஆதி திராவிடருக்கு வீடுகள்.

வினா 6467—திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பொதுப் திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் விடையளிப்பாரா—

சானார்பட்டி ஊராட்சி ஒன்றியம் பண்ணைப்பட்டி ஆதி திராவிட மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

திரு. கே. எம். தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 1 மணிக்கு கில்லட்டின் இருக்கிறது. அதற்குள் இன்றைய மானியக் கோரிக்கைகளை முடிக்க வேண்டும். அதனால்தான் வேகமாகப் போகிறேன்.

பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1986—87 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on estimates) தமிழ் நாடு சட்ட மன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும்

பொருட்டு கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன் :—

1. திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்
2. திரு. சோ. மா. இராமச்சந்திரன்
3. திரு. பொன் முத்துராமலிங்கம்
4. திருமதி டி. யசோதா
5. திரு. ஜி. கே. ஜெ. பாரதி
6. திரு. சு. சிவராஜ்
7. திரு. பெ. செங்கோட்டையன்
8. திரு. எம். இராசரத்தினம்
9. திரு. கே. குப்புசாமி
10. திரு. செ. செம்மலை
11. திரு. துரை கோவிந்தராசன்
12. டாக்டர் அ. பொன்னுசாமி
13. திரு. க. நரசிம்ம பல்லவன்
14. திரு. சைதை சா. துரைசாமி
15. திரு. எஸ். பாலசுப்பிரமணியன்
16. திரு. ஏ. தங்கராசு

முறையான வேட்புத் தாள்கள் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை, தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால் 1986-87 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 222-வது விதியின் கீழ் திரு. கே. குப்புசாமி குப்புசாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.